SRI LANKA

# இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர்கள் கழகம்

## மட்டம் I பரீட்சை – ஜூலை 2023

**(Level I Examination – July 2023)**

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

## (104) வணிகச் சூழல் (BEN)

**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்**
இல, 640, வென். முறுத்தெட்டுவெ ஆனந்த நாகிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05
தொ.பே - 011 2 559 669

கல்வி மற்றும் பயிற்சி பிரிவின் வெளியீடு

**இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்**

**மட்டம் I பரீட்சை – ஜுலை 2023**

# (104) வணிகச் சூழல்

**பரிந்துரைக்கப்பட்ட விடைகள்**

**இருபது (20) கட்டாய வினாக்கள்**
**(மொத்தம் 40 புள்ளிகள்)**

**பகுதி A**

## *வினா 01 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

**1.1** (3)

**1.2** (1)

**1.3** (4)

**1.4** (4)

**1.5** (3)

**1.6** (1)

**1.7** (1)

**1.8** (3)

**1.9** (2)

**1.10** (2)

*(02 புள்ளி வீதம், மொத்தம் 20 புள்ளிகள்)*

1.11 தவறானது

1.12 சரியானது

1.13 தவறானது

1.14 சரியானது

1.15 சரியானது *(02 புள்ளி வீதம், மொத்தம் 10 புள்ளிகள்)*

1.16 **முறைசார் அமைப்பு** என்பது நன்கு வரையறுக்கப்பட்ட கட்டமைப்பின் படி உருவாக்கப்பட்ட நபர்களின் குழு ஆகும். உ-ம்: சந்தைப்படுத்தல் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி, கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட நிறுவனம்

**முறைசாரா நிறுவனங்கள்** என்பது தனிநபர்களின் சமூக செயற்பாட்டின் விளைவாக உருவாக்கப்பட்ட மக்கள் குழுக்கள். இந்த நிறுவனங்கள் முறையான அமைப்பு இல்லாமல் உருவாக்கப்படுகின்றன, முறைசாரா அமைப்பு முறையான நிறுவனத்திற்குள் செயற்பட முடியும். உ-ம்: நண்பர்கள் குழு, முகப்புத்தக அரட்டை குழு

*(02 புள்ளிகள்)*

1.17 இரட்டைக் காப்புறுதி என்பது ஒரு காப்புறுத்துபவர் தமது இடரை (உயிர் அல்லது சொத்து) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காப்புறுதி நிறுவனங்களில் வைப்பதாகும்.

*(02 புள்ளிகள்)*

1.18

1. பெறுமதி முறைமை
2. நிறுவன கலாச்சாரம்
3. தூரநோக்குக் கூற்று
4. முகாமைத்துவ கட்டமைப்ப
5. மனித வளங்கள்
6. ஏனைய வளங்கள்

*(02 புள்ளிகள்)*

1.19

1. வணிக வாய்ப்புகளைக் கண்டறிந்து அவற்றைப் பயன்படுத்துதல்
2. உற்பத்திகளில் மாற்றங்கள் அல்லது புதுமைகளைச் செய்தல்
3. உழைப்பு, நிலம் மற்றும் மூலதனம் போன்ற உற்பத்திக் காரணிகளைக் கொண்டு ஒழுங்கான முறையில் புதிய பொருட்களை உற்பத்தி செய்தல் மற்றும் பொருட்கள், சேவைகளை நவீனமயமாக்குதல்.

aat SRI LANKA

4. உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தக்கூடிய பல்வேறு மாற்றுகளைத் தீர்மானித்தல் மற்றும் செய்யப்பட வேண்டிய வேலையின் அளவைத் தீர்மானித்தல்.
5. வணிக நடவடிக்கைகளை ஆரம்பித்தல் மற்றும் வழிநடத்துதல்
6. வணிக மாற்றங்களை முன்னறிவித்தல்
7. வேலைகளை உருவாக்குதல்
8. வணிக இடர்களை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் குறைத்தல்.

*(02 புள்ளிகள்)*

**1.20** எதிர்கால நுகர்வினை விட்டுக்கொடுக்கமல் தற்போதைய பயன்பாட்டிற்கு உகந்ததாக வளங்களை உச்சமட்டத்தில பயன்படுத்துவதன் மூலம் நிலைபேறான அபிவிருத்தி அடையப்படுகிறது.

*(02 புள்ளிகள்)*

*(மொத்தம் 40 புள்ளிகள்)*

*பிரிவு A முடிவு*

*(மொத்தம் 40 புள்ளிகள்)* **பிரிவு B**

## *வினா 02 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:*

***அத்தியாயம் 01 II – வணிக அமைப்புக்கள் மற்றும் தொடர்புடைய எண்ணக்கருக்கள்***
***அத்தியாயம் 01 II – வணிக அமைப்புக்கள்***

**(a)** ஆம், சோமசிறியின் மரக்கறி விற்பனை வியாபாரத்தை ஒரு வணிகமாக வகைப்படுத்தலாம், ஏனெனில் அது அன்றாட வாழ்வில் மனித தேவைகளை பூர்த்தி செய்கிறது. மேலும் சோமசிறியின் மரக்கறி விற்பனை வியாபாரமானது முறையான வியாபாரம் கொண்டிருக்க வேண்டிய பொதுவான பண்புகளை கொண்டுள்ளது.

1. பொருளாதார நடவடிக்கையாக இருத்தல்.
2. கொள்வனவு, விற்பனை அல்லது பரிமாற்றம்.
3. ஒரு தொடர்ச்சியான செயன்முறை.
4. இலாபத்தினால் உந்தப்படுகிறது
5. இடர் மற்றும் நிச்சயமற்ற தன்மை.
6. தேவைகள் உருவாக்கம் அல்லத புத்துருவாக்கம்

எனவே, சோமசிறியின் மரக்கறி விற்பனை வியாபாரத்தை ”வணிகம்” என வகைப்படுத்தலாம்.

***(04 புள்ளிகள்)***

**(b)**

**உரிமை** - ஒருவருக்குச் சொந்தமானது

**மூலதனம்** - ஒரு தனி நபரினால் மட்டுமே மூலதனம் ஈடுபடுத்தப்படும்.

**நிர்வாகம் மற்றும் தீர்மானம் மேற்கொள்ளல்** - வணிகமானது உரிமையாளரால் அல்லது அவரது மேற்பார்வையின் கீழ் நிர்வகிக்கப்படுகிறது. எனவே, வணிகத் தீர்மானங்கள் வணிகரால் சுயமாக மேற்கொள்ளப்படுகின்றன.

**பொறுப்பு –** வரையறையற்ற பொறுப்பு உள்ளது. அதாவது வெளிவாரிக் கடனை அடைப்பதற்காக தனது தனிப்பட்ட சொத்தை தியாகம் செய்ய வேண்டியிருக்கும்.

**தனியான சட்ட ஆளுமை –** தனியான சட்ட ஆளுமை அற்றது. வியாபாரமானது தனிப்பட்ட உரிமையாளரின் பெயரின் கீழ் மட்டுமே வணிகத்தை செயற்படுத்த முடியும்.

**பதிவு –** பதிவு செய்தல் கட்டாயமில்லை. உரிமையாளரின் பெயரைத் தவிர வேறு எந்த பெயரிலும் வணிகத்தை செயற்படுத்துவதாயின் அந்தந்த மாகாண சபையின் வியாபார பெயர் பதிவு, 1918 ஆம்

ஆண்டின் 06 ஆம் இலக்க வணிகப் பெயர் கட்டளைச் சட்டத்தின்படி மாகாண சபையின் வணிகப் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட வேண்டும்.

**இலாபம் மற்றும் நட்டம்** - தனியாக ஏற்கப்படும்.

**வரி செலுத்துதல்** - வணிகர் பெயரில் தனிப்பட்ட முறையில் வரி செலுத்தப்பட வேண்டும். வணிகத்தின் பெயரில் வரி செலுத்த அவசியமில்லை.

**கணக்கியல் மற்றும் கணக்காய்வு** - கணக்கியல் மற்றும் கணக்காய்வு கட்டாயமில்லை. வினைத்திறன்மிக்க நிதிப் பயன்பாட்டிற்காக அவை பராமரிக்கப்படலாம்.

**தொடர்ந்து செல்லல்** - தொடர்ந்து செல்லும் தன்மையற்றவை.

***(03 புள்ளிகள்)***

**(c)**

1. ஆரம்பிப்பது இலகுவானது
2. சட்டரீதியான தாக்கம் இல்லை.
3. இலாபம் மற்றும் நட்டத்தை தனியாக பகிர்ந்து கொள்ளும்.
4. கட்டுப்படுத்தல் மற்றும் தீர்மானமெடுத்தல் இலகுவானது.
5. தனிப்பட்ட ஈடுபாட்டுடன் வணிகத்தை மேம்படுத்தலாம்
6. வணிக இரகசியங்களை பாதுகாக்க முடியும்.
7. வியாபாரத்தை கலைப்பது எளிது
8. சுய திருப்தி
9. வாடிக்கையாளர்களுடன் நேரடியாக தொடர்பு கொள்ள முடியும்.
10. அதிக சிக்கனமாக இருக்க முடியும்.

***(03 புள்ளிகள்)***

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

SRI LANKA

## *வினா 03 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:*

***அத்தியாயம் 04 – - வணிக அமைப்புக்களில் வியாபாரம்***

***அத்தியாயம் 05 வணிகத்தின் மீதான செல்வாக்கு, வணிக நெறிமுறைகளின் முக்கியத்துவம் மற்றும் வணிகம் ஒன்றின் சமூகப்பொறுப்பு***

**(a)** வர்த்தக தடை என்பது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளால் விதிக்கப்படும் வணிக மற்றும் நிதி அபராதங்கள் ஆகும். அத்தண்டங்கள் ஒரு நாடு, அமைப்பு, குழு அல்லது தனிநபருக்கு எதிராக இலக்கு வைக்கப்படலாம்.

***(02 புள்ளிகள்)***

**(b)**

1) நுகர்வோர் மற்றும் இணைய அணுகல் மீதான கட்டுப்பாடுகள்
2) பணம் செலுத்துவதில் சிக்கல்கள்
3) தொழிற்திறன் சிக்கல்களை உருவாக்குதல்.
4) கொடுப்பனவு முறைகள் மற்றும் பெறுகைகள் தொடர்பான வாடிக்கையாளர்களின் உணர்வு
5) ஆரம்ப செலவுகள் அதிகரித்தல்.

***(03 புள்ளிகள்)***

**(c)**

**வேலைவாய்ப்புக்கு பங்களித்தல்**

நிறுவனங்கள் மனித வளங்களை பணியமர்த்துவதன் மூலம் வணிகத் துறையின் வேலைவாய்ப்புவீத அதிகரிப்புக்கு வழிவகுக்கிறது. இந்த நிபந்தனை அரசாங்கம் அதன் நோக்கங்களை நிறைவேற்ற அனுமதிக்கிறது. குறிப்பாக, இது வேலைவாய்ப்பு ஸ்திரத்தன்மை, பொருளாதார வளர்ச்சி மற்றும் மேம்பாடு மற்றும் வருமானச் செல்வத்தை மீள முதலீடு செய்வதற்கு சாதகமான சூழ்நிலைகளை உருவாக்கும்.

**சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்பை குறைத்தல்.**

நிலையான வளர்ச்சியின் ஒரு ஒரு துறையாக சுற்றுச்சூழல் தற்போது உருவாகி வருகிறது. வணிகங்கள் சுற்றுச்சூழலுக்கு உகந்த அணுகுமுறையை நோக்கி நகர்வதுடன், ஒவ்வொரு வணிகத் தீர்மானங்களிலும் செயற்பாடுகளிலும் சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைக்கின்றன.

aat SRI LANKA

**உள்நாட்டு வளங்களைப் பயன்படுத்துதல்**

வணிக நோக்கங்களுக்காக நாட்டின் வளங்களை அதிகரிப்பது மற்றும் உள்நாட்டு வளங்களைப் பயன்படுத்துவது மக்களின் கொள்வனவு சக்தியை மேம்படுத்துவதோடு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், பொருளாதார அபிவிருத்திக்கு பூரண வேலைவாய்ப்புக்கும் அதிகமாகப் பங்களிக்கிறது.

**முறையாக வரி செலுத்துதல்**

வணிகங்கள் தங்கள் வருமானம் அல்லது இலாபத்தின் அடிப்படையில், அரசுக்கான வரியை தவறாமல் அவ்வப்போது செலுத்துகின்றன. அரசாங்கத்தின் வகிபாகத்தை நிறைவேற்ற தேவையான நிதியை அவை வழங்கும்.

**அரசின் கொள்கைகளைப் பின்பற்றுதல்**

அரசு காலத்துக்குக்காலம் செயற்படுத்தும் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு வணிகங்கள் கட்டுப்பட்டிருக்கின்றன. இதன் விளைவாக, அரசாங்கத்தின் நிதிக் கொள்கை மற்றும் பொருளாதாரத்தில் தொடர்புடைய பிற கொள்கைகளை செயற்படுத்துவதில் தொழில்முனைவோர் பெரும் பங்களிப்பை வழங்குகிறார்கள்.

*(05 புள்ளிகள்)*

*(மொத்தம் 10 புள்ளிகள்)*

## *வினா 04 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

| |
|---|
| ***அத்தியாயம் 03 – வியாபாரத்தின் துணைச்சேவைகள்*** |
| ***அத்தியாயம் 04 - வணிக அமைப்புக்களில் வியாபாரம்*** |

**(a)**

**சமப்படுத்தப்பட்ட ஏற்பாட்டியல் முறைமை**

உற்பத்தி நிறுவனத்திற்கான இருப்புக்களின் விநியோக செயலாக்கத்தின் அதே அளவிலான போக்குவரத்து முறைமையினை, செயன்முறைக்குப் பின்னர் பொருட்களை இறுதி நுகர்வோருக்கு விநியோகிக்கும் முறைமையினைத் தக்கவைத்துக்கொள்ளும் முறைமைகளை இது குறிக்கிறது. பெரும்பாலும் இத்தகைய அமைப்புகள் நுகர்வோர் பொருட்கள் நிறுவனங்களில் காணப்படுகின்றன.

**கனரக உள்வரும் ஏற்பாட்டியல் முறைமைகள்**

உற்பத்தி செயல்முறை சிக்கலான முறைமைகளுக்கான போக்குவரத்து, இது வாடிக்கையாளர் மீது செயன்முறை மேற்கொள்ளப்படும் வரை எளிமையான செயன்முறையாகும். ஒரு உதாரணமாக, பெரும்பாலும் உற்பத்தி செய்யப்பட்ட சில பாரிய அளவிலான விமானம் தாங்கிகளின் உற்பத்தி செயன்முறை தொடர்பான சிக்கலான செயன்முறையை உள்ளடக்கும்.

**கனரக வெளிச்செல்லும் ஏற்பாட்டியல் முறைமைகள்**

நிறுவனம் தயாரிக்கும் உற்பத்தி வகையைப் பொறுத்து, வாடிக்கையாளர்களுக்கு ஒரு சிக்கலான செயன்முறையை வழங்குவதற்காக செயற்படுத்தப்பட வேண்டிய விநியோக சேவை அமைப்புகளைக் குறிக்கிறது.

**தலைகீழ் ஏற்பாட்டியல் முறைமைகள்**

இதன் கருத்து, வாடிக்கையாளருக்கு பொருட்களை வழங்கிய பிறகும், உற்பத்தி வழங்குநர்களுடன் தொடர்புபடும் ஒரு பாய்ச்சல் ஆகும். உற்பத்தியானது விற்கப்பட்ட பிறகும், மீண்டும் பயன்படுத்தக்கூடிய எரிவாயு சிலிண்டர்களைப் பொதியிடல் மற்றும் சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் பொதியிடலை அகற்றுதல் போன்ற உறவுமுறைகள் பராமரிக்கப்பட வேண்டும்.

*(04 புள்ளிகள்*

**(b)**

**அதிக இலாபம் பெறும் வாய்ப்புகள்**

உள்நாட்டு சந்தையில் குறைந்த எண்ணிக்கையிலான வாடிக்கையாளர்கள் இருக்கலாம், எனவே தேவையான அளவு பொருட்கள் மற்றும் சேவைகளை விற்பனை செய்வதன் மூலம் வணிகம் அதிக இலாபம் ஈட்ட முடியாமல் போகலாம்.

**மூலப்பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான அணுகல்**

வணிகத்திற்குத் தேவையான அனைத்து மூலப்பொருட்கள் மற்றும் சேவைகள் நாட்டிற்குள் கிடைக்காமல் போகலாம். குறைந்த விலையில் சரியான மற்றும் உயர்ந்த தரம்மிக்க மூலப்பொருட்களை அணுகுவதற்கு. அவர்கள் சர்வதேச வர்த்தகத்தில் பங்கேற்க வேண்டும்.

**வரி சலுகைகள்**

பெரும்பாலான நிறுவனங்கள் பொருளாதாரத்திற்காக வெளிநாட்டு நாணயத்தை ஈட்டுவதால் பொருட்கள் மற்றும் சேவைகளை ஏற்றுமதி செய்யும் வணிகங்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

**ஒப்பீட்டு அனுகூலம்**

உள்நாட்டு சந்தை வணிகத்திற்கு மிகவும் கவர்ச்சிகரமானதாக இல்லாதபோது, உள்நாட்டு சர்வதேச போட்டி.

**உலகளாவிய சந்தைகளுக்கான அணுகல்**

உலகளாவிய சந்தையை அணுகுவதற்கான வாய்ப்பு உள்ளது.

*(06 புள்ளிகள்)*
*(மொத்தம் 10 புள்ளிகள்)*

SRI LANKA

## *வினா 05 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

| |
|---|
| ***அத்தியாயம் 03 – வணிகத்தின் துணைச்சேவைகள்*** |
| ***அத்தியாயம் 07 – முயற்சியாளர்களின் பங்களிப்பு*** |

**(a)**

1. குறைந்த செலவு
2. கிடைப்பனவு
3. வேகம்
4. முழுமைத்தன்மை
5. சுருக்கமானதன்மை
6. கருத்திற்கொள்ளல்
7. திடமானதன்மை
8. பணிவு
9. சரியானதன்மை
10. பாதுகாப்பு மற்றும் இரகசியம்

***(03 புள்ளிகள்)***

**(b)**

1. **கிரய விளைதிறன்:** இது குறைந்த செலவில் வாடிக்கையாளர்களுடன் எளிதாக தொடர்பு கொள்ள அனுமதிக்கிறது.
2. **அமைப்பது எளிது:** இது வணிகத்தை விரைவாகவும் எளிதாகவும் வாட்ஸப்பைப் பயன்படுத்தவும் வாடிக்கையாளர்களுடன் தொடர்புகொள்ளவும் உதவுகிறது.
3. **நுண்ணறிவுகளை வழங்குதல்:** வணிகமானது வாடிக்கையாளர் ஈடுபாட்டைப் பற்றி மேலும் புரிந்து கொள்ளக்கூடியதாக இருப்பதுடன், உரையாடல் நுண்ணறிவு மூலம் மேலும் செயற்படக்கூடிய தீர்மானங்கள் மற்றும் அனுபவத்தை எடுக்க முடியும்.
4. **பரந்த பயன்பாட்டுத் தளத்தை அடைய உதவும்**: வாட்ஸப்பின் வழக்கமான பதிப்பைப் பயன்படுத்தும் நபர்களின் எண்ணிக்கையின் காரணமாக, வணிகப் பதிப்பு நிறுவனங்கள் உள்நாட்டு மற்றும் உலகளாவிய உட்பட பல வாடிக்கையாளர்களை அடைய உதவுகிறது.
5. **வாடிக்கையாளர் அனுபவம் மற்றும் ஈடுபாட்டை மேம்படுத்துதல்**: வாடிக்கையாளர்களுக்கு தனிப்பயனாக்கப்பட்ட செய்திகளை அனுப்ப இது அனுமதிக்கிறது. எனவே, இது ஒட்டுமொத்த வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்த உதவுகிறது. இது வணிகங்களை வாடிக்கையாளர்களுடன் ஈடுபடவும், உறவை உருவாக்கவும், வாடிக்கையாளர் விசுவாசத்தை மேம்படுத்தவும் அனுமதிக்கிறது.

***(04 புள்ளிகள்)***

aat SRI LANKA

**(c)**

1) காப்புறுதி
2) நிதிச் சேவைகள்
3) போக்குவரத்து
4) வங்கி
5) ஏற்பாட்டியல்

*(03 புள்ளிகள்)*

*(மொத்தம் 10 புள்ளிகள்)*

*பிரிவு **B** முடிவு*

(*மொத்தம் 20 புள்ளிகள்)*

**பிரிவு C**

## *வினா 06 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

**(a)**

| பலம் | பலவீனங்கள் |
|---|---|
| • உற்பத்திகள் மிகவும் பிரபலமானவை<br>• வர்த்தகம் செய்யும் பொருட்கள் ஒப்பீட்டளவில் மலிவானவை<br>• போக்குவரத்து வசதிகள் மற்றும் ஏற்பாட்டியல் கிடைப்பனவு (லாரிகள், கடைகள் போன்றவை)<br>• அங்கீகரிக்கப்பட்ட வங்கிக் கடன் வசதி கிடைப்பனவு | • உற்பத்திகள் இரண்டாம் நிலைத் தரமுடையவை<br>• வரையறுக்கப்பட்ட சந்தை |
| **வாய்ப்புகள்** | **அச்சுறுத்தல்கள்** |
| • மற்றைய பகுதிகளுக்கு விரிவாக்கப்படும் சாத்தியம் (அனுராதபுரத்தில் ஒரு புதிய சந்தை)<br>• புதிய வணிக வாய்ப்புகளில் பல்வகைப்படுத்துதல் | • உற்பத்திக் கிரயம் அதிகரிப்பு (எரிபொருள் கிரயம் போன்றவை)<br>• இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் விலை அதிகரிப்பு<br>• மூலப்பொருள் பற்றாக்குறை<br>• வழங்குனர்கள் விலையை அதிகரித்தல்<br>• அரசால் விதிக்கப்படும் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் |

*(06 புள்ளிகள்)*

**(b)**

**விடை அவர் ஒரு வணிகர் எனில்,**

சாந்தா ஒரு வணிகர், ஏனெனில் அவர் ஏற்கனவே உள்ள வணிக யோசனையே எடுத்துக்கொண்டிருப்பதுடன், அவர் தனது சொந்த யோசனையைப் புதுமைப்படுத்தவில்லை, மேலும் அவர் கொள்வனவு மற்றும் விற்பனை செய்யும் தொழிலில் அதிகம் ஈடுபட்டுள்ளார். அத்தோடு, அவர் பாரம்பரியமாக சிந்திப்பது மற்றும் ஏற்கனவே உள்ள யோசனை அல்லது எண்ணக்கருவுடன் ஆரம்பித்தல் போன்ற வணிக நபர்களின் பெரும்பாலான பண்புகளைக் கொண்டுள்ளார்.

aat SRI LANKA

**விடை அவர் ஒரு முயற்சியாளர் எனில்,**

சாந்தா ஒரு முயற்சியாளர் ஆவார். ஏனெனில் அவர் ஒரு புதிய சந்தை அல்லது வணிக வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள ஒரு புதிய யோசனையுடன் ஒரு வணிகத்தைத் தொடங்கினார். அவர் இடர்களையும் எதிர்கொள்வதுடன், பிரச்சினைகளை சாதுரியமாக சமாளித்து தனது தொழிலில் வெற்றிபெற உறுதிபூண்டுள்ளார்.

***(04 புள்ளிகள்)***

**(c)**

**பொதுப் பங்காளர்**

பொது பங்காளர் என்பது வணிகத்தின் நிர்வாகத்தில் ஈடுபடுவதுடன், வரையறையற்ற பொறுப்பைக் கொண்ட, பொதுமக்களால் அறியப்பட்டவர் மற்றும் அனைத்து வணிக சலுகைகளையும் அனுபவிக்கும் பங்காளர் ஆவார்.

**இயங்கும் பங்காளர்**

இயங்கும் பங்காளர்கள் வணிகத்தில் ஆர்வமாகப் பங்கேற்கும் மற்றும் வரையறையற்ற பொறுப்பைக் கொண்ட பொதுவான பங்காளர்கள் ஆவர். அவர்கள் பெரும்பாலும் இலாபப் பங்கைத் தவிர சம்பளத்தையும் பெறுவர்.

**முன்னுரிமைப் பங்காளர்**

கூட்டுப் பத்திரம் அல்லது பங்குடமை தொடர்பான பிற ஆவணங்களில் முதன்மையான பெயராகக் குறிப்பிடப்படும் ஒரு பொதுவான பங்காளர். வரி அல்லது பிற விடயங்கள் தொடர்பில் முதலில் அழைக்கப்படும் பங்காளர் இவராகவே இருப்பார்.

**செயலற்ற அல்லது தூங்கும் பங்காளர்**

ஒரு நிறுவனம் அல்லது பங்குடமையின் செயலில் உள்ள வணிகத்தில் எந்த வகிபாகத்தையும் கொண்டிராத, ஆனால் இலாபத்தில் ஒரு பங்கைப் பெறுவதற்கு உரிமையுள்ள ஒரு பங்காளரான இவர், நட்டத்தில் ஒரு பங்குபெற உரித்துடையவர் என்பதுடன், அவர் முகாமையில் பங்கேற்காத பங்காளர் என்பது பொதுமக்களுக்குத் தெரியாது.

**வரையறுக்கப்பட்ட பங்காளர்**

ஒரு வரையறுக்கப்பட்ட பங்குடமையில் பங்காளரான அவர் முதலீடு செய்த மூலதனத்தின் அளவிற்கு பொறுப்பு வரையறுக்கப்பட்ட பங்காளர் என்று அழைக்கப்படுகிறார். அவர்கள் முகாமை நடவடிக்கைகளில் பங்கேற்பதில்லை, அத்துடன் அவர் பங்காளர் என்பது பொதுமக்களுக்குத் தெரிந்திருக்காது.

aat SRI LANKA

**அமைதிப் பங்காளர்**

வரையறையற்ற பொறுப்பு மற்றும் மூலதன ஆதாயங்களுக்குப் பொறுப்பான, ஆனால் முகாமை நடவடிக்கைகளில் பங்கேற்காத பங்காளா். அவர் பங்காளர் என்பதைப் பொதுமக்கள் அறிந்திருப்பா்.

**இரகசியப் பங்காளர்**

வணிகத்திற்கு மூலதனத்தை முதலீடு செய்து, இலாபம் ஈட்டுவதுடன், முகாமையில் ஈடுபடும் வரையறையற்ற பொறுப்பைக் கொண்ட ஒரு பங்காளர் இவராவாா். அவர் ஒரு பங்காளர் என்று பொது மக்களுக்குத் தெரியாத வகையில் அவர் செயற்படுவதால் அவர் இரகசியப் பங்காளர் என்று அழைக்கப்படுகிறார்.

**இலாபப் பங்காளர்**

மூலதனத்தில் முதலீடு செய்து வரையறையற்ற பொறுப்புடன் இலாபம் ஈட்டும் பங்காளர் இவர் மட்டுமே ஆவாா். அவர் நட்டத்திற்குப் பங்களிப்பதில்லை. அத்தகைய பங்காளா்கள் வணிக முகாமையில் பங்கேற்க அனுமதிக்கப்படுவதில்லை.

**அரைகுறைப் பங்காளர்**

மூலதனத்திற்குப் பங்களிக்காமல், அதற்குப் பதிலாக கடனை வழங்கி, வருடாந்த இலாபத்திற்கு ஏற்ப மாறுபடும் வட்டி வீதத்தைக் கொண்ட ஒரு பங்காளர் இவராவாா்.

சில சமயங்களில் ஒரு பங்காளர் ஓய்வு பெறும்போது, அவர் பங்குடமையில் இருந்து அவருக்குத் தேவையான பணத்தைப் பெறுகிறார். அவர் ஒரு பங்காளர் என்பதைப் பொதுமக்கள் அறிந்திருப்பதுடன், அவரது பொறுப்பு வரையறையற்றதாகும். அத்துடன், அவா் முகாமை நடவடிக்கைகளிலும் பங்கேற்பதில்லை.

**பெயரளவுப் பங்காளர்**

பங்குடமையின் மூலதனத்தில் முதலீடு செய்யாமல் ஒரு தொழில்சாா்நபா் அல்லது நிபுணா் என்ற அடிப்படையில் தனது நற்பெயரை மட்டுமே பயன்படுத்தி இலாபம் அல்லது நட்டத்தில் பங்கேற்கும் பங்காளர் என்பது இதன் பொருள் ஆகும். அவர் வணிகத்தின் முகாமையில் பங்கேற்காது இருப்பதுடன், அவரது பொறுப்பு வரையறையற்றதாகும்.

***(06 புள்ளிகள்)***

**(d)** 1. நிதி ரீதியாக கணக்கிட முடியாத எதிர்கால இழப்புகள்

2. முகாமையாளர்கள் அல்லது முயற்சியாளா்களின் தீர்மானங்களால் ஏற்படும் இழப்புகள்

3. இயல்பான காரணங்களால் ஏற்படும் வணிக இடா்கள் (வழக்கிழப்பு, தேய்மானம், ஆவியாதல்)

4. எதிர்கால சந்தையை புரிந்து கொள்ள இயலாமையால் ஏற்படும் பாதிப்புகள்.

5. முறை மாற்றம், சந்தை ஏற்றம், மந்தநிலை ஆகியவற்றால் ஏற்படும் இழப்புகள்

aat SRI LANKA

6. தனிப்பட்ட காயம் (தேர்வு தோல்வி, காதல் இழப்பு), அவர்களின் திறன் மற்றும் வலிமை அடிப்படையில்

***(02 புள்ளிகள்)***

**(e)**

1. நிதி வசதிகள்
2. நாணயமாற்று வசதிகளை வழங்குதல்
3. பயிற்சியளித்தல் மற்றும் வழிகாட்டுதல் மூலம் முகாமைத் திறன்களை மேம்படுத்துதல்
4. முயற்சியாண்மையை ஊக்குவித்தல்.
5. தேசிய வடிவமைப்பு நிறுவனம் மூலம் ஏற்றுமதி சந்தைக்கு வழங்கக்கூடிய புதிய உற்பத்திகளுக்கான வடிவமைப்புகளை அறிமுகப்படுத்துதல்.
6. முகாமை விருத்தி - பொது மற்றும் தனியார் துறை முகாமையாளர்கள் மற்றும் தொடர்புடைய மேற்பார்வை அதிகாரிகளுக்கு பயிற்சி வழங்குதல்
7. முகாமை ஆராய்ச்சியை நடத்துதல் - தொடர்புடைய துறையில் தரவுகளை சேகரித்தல்
8. தொழிற்துறைகளுக்கு தொழிற்திறன் ஆலோசனை சேவைகளை வழங்குதல்.
9. தொழிற்திறன் பயிற்சித் திட்டங்களை செயற்படுத்துதல்.

***(02 புள்ளிகள்)***
***(மொத்தம் 20 புள்ளிகள்)***

aat SRI LANKA

***பிரிவு C முடிவு***

## *Notice:*

These answers compiled and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.

These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers". The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

SRI LANKA

*© 2021 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka). All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*